NOVEMBER/DECEMBER 2025

FTA53/CTA53 — தமிழ்மொழி வரலாறு

Time : Three hours　　　　Maximum : 75 marks



பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை?

2. தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்துக்கள் யாவை?

3. தெய்வத் தமிழ் எனச் சுட்டப்பெறும் இடைக்காலத் தமிழ் வகைமை எது?

4. நான் எனும் சொல் கையாளக் பெற்ற முதல் இலக்கியம் எது?

5. தற்காலத் தமிழில் பொதுப் பெயரின் வகைமை யாது?

6. சாசனச் செய்யுள் மஞ்சரியை எழுதியவர் யார்?

7. தற்சமம் என்றால் என்ன?

8. குழூஉக்குறி என்றால் என்ன?

9. கிரந்த எழுத்து - வரையறுக்க.

10. அண்மை உறுப்பு முறை என்றால் என்ன?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) எழுத்துச் சான்று இல்லாத மொழிகளின் வரலாற்றை அறியும் முறைகளைப் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியங்களின் வழி வினா வாக்கியங்களின் அமைப்பை விளக்குக.

12. (அ) நாயக்கர் காலத் தமிழில் தடையொலிகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழர் காலத் தமிழில் பயின்று வரும் எச்சங்கள் குறித்து விளக்குக.

13. (அ) குகைக் கல்வேட்டுக்கள் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) அறிவியல் தமிழ் பற்றி விளக்குக.

14. (அ) தமிழ்ச் சொற்பொருள் மாற்றம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் - போர்ச்சுகீசிய மொழிக்கலப்பு பற்றி விளக்குக.



15. (அ) எழுத்து முறையின் பிரிவுகளை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மொழி அமைப்பை வகைப்படுத்துக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

16. சங்கம் மருவிய காலத் தமிழ்தொழியின் அமைப்பை எடுத்துரைக்க.

17. மராட்டியர் காலத் தமிழின் எழுத்து முறைமை குறித்து விவரிக்க.

18. தற்காலப் பேச்சுத் தமிழின் ஒலி மாற்றங்கள் பற்றி விவரிக்க.

19. தமிழ்க் கிளைமொழிகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. மாற்றிலக்கணத்தின் மூன்று பகுதிகளைச் சான்றுடன் விவரிக்க.
